உ

சிவமயம்.

# கிருகஸ்தாசாரிய

# நிர்ணயம்.

இஃது

சிதம்பரம்

டை ஆசாரியர் சீடன்

இரத்தினம்பிள்ளையால்

---


சிதம்பரம்

ஸ்ரீ பாலாம்பிகா விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

## கரூர் சைவபரிபாலனம்,

துந்துபிஹூ தைமீ 2உ பத்திரிகையில்
சிதம்பரம் ஸ்ரீ சிவஞானத்திருத்தளி ஆதீன
சு, கணபதிப்பிள்ளை. என்று கையெழுத்திட்டு
அடியில்வரும் விஷயம் எழுதப்பட்டிருக்கிறது.

---

ஸ்ரீ சிவஞானபாஷியம் வெளிவந்த பிறகு அதன் சிறப்புப்பாயிரத்தில் நாலாம்வருணத்துக் கிருகத்தருக்குக் குருத்துவமில்லையென்று காட்டப்பட்ட வசனத்தைக் கண்டு பண்டாரத்தார்கள், ஸ்ரீ சிவஞானசுவாமிகள் தங்களுக்கும் தம்பிரான்களுக்கும் ஏற்பட்ட விரோதம் பற்றியெழுதியதே தவிர மெய்ம்மையல்லவென்று பொய்ம்மை வசனம் பேசுகிறார்கள் அவ்விருவருக்கும் ஏற்பட்ட விரோதமிது அதற்கேது விது இதற்கேது வது என்று பேசாது வாளா அவேதம் பேசுவதே அக்கூற்றுப் போலி என்பதைக்காட்டுகின்றது. மேலும் அதனுள் எடுத்துக் காட்டப்பட்ட வசன சமாதானம். கூறு முறையாற் கூறி ஸ்தாபிக்கு முறையால் ஸ்தாபிப்பதே பொருத்தம். அன்றிச், சொல்லுதல் யார்க்கும் எளிய என்றபடி, எளிதாய்ச்சொல்லிச், சொல்லியவண்ணம் செய்யாது விடுதலே அதுபோலியாதற்குப் போதுமான சாக்ஷியாகும்.

(என்று எழுதப்பட்டிருக்கிறது.)

உ

# கிருகஸ் தாசாரிய நிர்ணயம்.

புண்ணிய தேசங்களிற் பிறந்தவர்களுள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சுத்தகுலத்திற் பிறந்த சூத்திரர் ஆகிய நால்வருமே ஆசாரியராவர், அவர்கள் சாமம், வெகுளி, மயக்க, முதலிய மனக்குற்றங்களும் அங்கஹீனத்துவ முதலிய உடற்குற்றங்களுமில்லாதவராயிருத்தல் வேண்டும்.

எப்பொழுதும் பதிநூல்களைப் படியாமல் பசுநூல்களைப் படிக்கும் பொய்யனும், தனக்குத் தன்னாசிரியர் போதித்தபடி தன்மாணாக்கர்களுக்குப் போதிக்குஞ் சக்தியில்லாதவனும், தன்னாசிரியர் ஒழுகினவழி தாம் ஒழுகாதவனும், ஆகிய இவர்கள் ஆசாரியர்கள் ஆதற்கு உரியரல்லர். அவர்கள் தீக்ஷை, பிரதிஷ்டை முதலியவைகள் செய்தால் சிவசான்னித்தியம் உண்டாகாதெனச் சிவாகமங்கள் கூறும்.

ஆசாரியர்களுக்கு உரிய கர்மங்கள் நித்தியம், நைமித்திகம், காமியம், என்பனவாம். நீரில் மூழ்கித்தர்ப்பணஞ் செய்து சிவார்ச்சனை புரிந்து அக்கினி காரியஞ் செய்தல் முதலான நித்திய கர்மங்களாம்.

தீக்ஷை, பிரதிஷ்டை, சாந்தி, உக்தியா
பந முதலாயினவும். ஆகம வாக்கியங்களை நன
மாணவர்களுக்கு சொல்லி அவற்றின் பொருளை
விரித்துரைத்தலும் நைமித்திக கர்மங்களாம்.
சித்திகளை விரும்பி விசேஷதினங்களில் விசேஷ
மாக சிவபூசை செய்தல் மந்திரங்களைச் ஜெபம்
பண்ணுதல் முதலாக அவரவர்கள் பிரீதிக்கிசை
ந்த கர்மங்கள் காமியத்தின்பாற்படும். பிரமசாரி,
கிருகஸ்தர். என்றுசொல்லப்படும் இவ்விருவருமே
ஆசாரியராதற்கு உரியராவர், பிரமசாரிகள்
பௌதிகப்பிரமசாரி நைட்டிகப்பிரமசாரி என
இருவகைப்படுவர். பால்யவயதுதொடங்கிக் கல்
யாணகாலம் வரையில் பிரமசரிய விரதநியம
மனுட்டிப்பவர் பௌதிகப்பிரமசாரி. மரணபரியந்
தம் பிரமசரியவிரத நியதியை உடையவராயிரு
ப்பவர் நைட்டிகப் பிரமசாரி, பிரமசாரியாகிய
ஆசாரியர் தன்மாணாக்கர்களுக்கு முத்தி ஒன்றே
கொடுத்தற்கு உரியர் கிருகத்தில் வாழும் ஆசா
ரியர் போக மோக்ஷ மிரண்டையுங் கொடுத்தற்கு
உரியர்.

---

சாலோத்தரே.—கிருகஸ்தஸர்வவர்ணே
ஷ்ுசிரேஷ்டோ குருருதா ஹிருத: என்றும்.

விரதந்திரே.—கிருகஸ்தச் சோத்தமம்
வித்தியாத்ததவாபிர்ம சாரிணௌ | ஸாந்தாநிக

கிருஹீ சிரேஷ்டோ கிருகஸ்தஸ்ததபாவத:
என்றும்,

காமிகே.—சாதுர்வர்ணகிருகஸ்தாநா
மாசார்யத்துவம்ஸமாசரேத் என்றும்.

கிரணே.—ஸாந்தானிக குருப்ரோக்தோ
கிருகஸ்தத்தேசிகோத்தம:— கிருகஸ்தச்சோத்
தமம் வித்தியாத் அதவாபிர்ம சாரிணௌ.

கிருகஸ்தோதேசிகசிரேஷ்டோபோக
மோக்ஷ பிரஸித்தயே. என்றும். (சிவாகமங்களிற்
கூறப்பட்டிருக்கின்றன.)

---

இனித் துறவற ஆச்சிரமிகளாயுள்ள தருமபுர முதலிய மடாதிபதிகளே, கிருகஸ்தாசாரியரை ஆசாரியராகக் கொண்டிருந்ததாலும், திருவாவடுதுறை முதலிய மடங்களில் ஞானாசாரியரிடத்தில் ஞானதீக்ஷா பத்ததியின்படி ஞானதீக்ஷை பெற்றுக்கொண்ட சீடர்கள் காமியாகி விரத மனுஷ்டித்து ஷைவிரதத்தைப் பூர்த்திசெய்து பலனையடைய விரும்புவோர் ஷை ஞானதீக்ஷா குருவினால் செய்பக்கூடாதாகையாலும், கிருகஸ்தா சிரியரையடைந்து ஷை விரதத்தைப்பூர்த்திசெய்துபோக மோக்ஷாதிகளைப்பெறுவதாலும், தாம் செய்து வந்த கர்மானுஷ்டானங்களில் வழுவினதை அந்தியேட்டிக் கிரி

யையால் பிராயச்சித்த முதலியவைசெய்து மோக்ஷ மடைவிப்பதாலும் கிருகஸ்த்தாசாரியரே உத்தமரென்று கூறப்படுவர்.

ஸ்ரீ சிவஞான போகிகள் பாஷ்யத்தில் நான்காம் வருணத்துகிருகஸ்தாசாரியரைப்பற்றி காமிகாகம முதலிய ஆகமத்தில் குருத்துவமுண்டென்று கூறியது பொதுவாகவும் காமிகாகமத்தில் சிலவிடத்தில் குருத்துவமில்லை என்றுகூறியது சிறப்பாகவுமென்றறிக என்றும், குருத்துவமுண்டென்று கூறியது ஆதிசைவாசாரியரைக் குறிக்கப்பட்டதென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

சிவஞானயோகிகள் வடமொழி தென்மொழி இவைகளில் பாண்டியத்துவமுடையவர்களாயிருந்தும் காமிக முதலாகிய ஆகமங்களெல்லாம் ஷை வருணத்து கிருகஸ்த்தாசாரியருக்குக் குருத்துவம் உண்டென்று கூறியிருந்தும், ஷை யோகிகளுக்கு முந்திய உரை ஆசாரியர்களாகிய ஞானப்பிரகாசர் முதலாகிய உரையாசிரியர்கள் ஆசாரிய லக்ஷணம் வருமிடத்து ஷை கிருகஸ்தாசிரியருக்குக்குருத்துவம் உண்டென்று கூறி இருந்தும் ஷையோகிகள் அதை மறுத்து உண்டென்று கூறும் வசனங்களெல்லாம், ஆதிசைவாசாரியரைக் குறித்துக் கூறினதென்று கொள்ளவேண்டு மென்று, தம் மனதின்கட்

கொண்ட கருத்தக்கு ஆகமங்கள் இடங்கொடாத தால பிரம..ணங் காட்டா தொழிந்தனர்.

இன்னும், நைட்டிகாசிரியர் நைட்டிகனுக்கும் பௌதிகனுக்குப், தீக்கை செய்தற்குரியவரென்றும், பௌதிகர் பௌதிகனுக்கே தீக்கை செய்தற்குரியவரென்றும், பிரமாணங்காட்டாது பாடியத்திற் றமது கொள்கையை யெழுதிவைத்தனர்,

(இதனல்) ஆதிசைவ கிருகஸ்தாசிரியரும் புத்தியொன்றினையே கொடுத்தற்குரியரென்றும் பெறப்படுவதால்அவ்வாதிசைவரும் உத்தம வாசிரியராகார்.

(ஆகமங்களில்) பௌதிகாசிரியர், போக மோக்ஷமிரண்டையுங் கொடுத்தற்குரியவரென்றும், நைட்டிகர் முத்தியொன்றினையே, கொடுத்தற்குரியவரென்றும் விதிக்கப் பட்டிருக்கின்றன யோகிகள் வசனம் சிவாகமங்களோடு முரணுத லால் ஷிவசனத்தை அனுசரியாதொழித்து சிவாகமங்களில் கிருகஸ்தாசிரியரே சிரேஷ்டர் என்றும் உத்தமரென்றும் விதந்தெடுத்துக் கூறப்படுவதால் அவ்வாக்கியங்களே சிறப்பாகுமென்றறிக.

(இனி) நான்காம் வருணத்து இல்வாழ்வானுக்கு குருத்துவமில்லையென்று கூறியது, சாவகாச

நிரவகாசவிதியாக், சிறப்பென்றும், முற்காலத்தில் ஆசிரியராக வுள்ளவர்களெல்லாம் நைட்டிகராக விருந்தார்களென்றும் ஷெபார்கள் விரதம் தாங்காது இருகஸ்தர்களாக மக்கண்முறைமையில் வந்தார்களென்றும். சிவாகமங்களில் ஆதிசைவர்க்கேயன்றி ஏனையோர்க்கு மக்கண்முறைமையினும் ஆசிரியத்தன்மை விதியாமையுமறிக என்றும் பாஷ்யத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யோகிகள் கூறிய இதனாலேயே, இக்காலத்தில் நான்காம் வருணததாரில் ஆசிரியரில்லை யென்றும் பெறப்படுகிறதுமன்றி நடு இரண்டுவருணத்தாரில் இல்வாழ்வார்க்கு ஆசிரியத்துவமில்லை யென்றும் பெறப்படுகின்றது. அவ்வாறுபெறப்படவே (ஆகமங்களில்) நானகுவருணத்தாருக்கும் ஆசிரியத்துவமுண்டென்று கூறும் வாக்கியங்களும் அவற்றுள்ளும் இக்கலியுகத்தில் நான்காம் வருணத்து ஆசிரியரேவிசேடமென்று விதந்தெடுத்தோதப்பட்ட வாக்கியங்களெல்லாம், அப்பிரமாணமாய் பயனற்றதாய் போகுமென்றெண்ணுது, கிருகஸ்தாசாரியரிடத்தில்வைத்த பொறாமையால் யோகிகள் மதிமயங்கிக் கூறினரென்றறிக. ஷெ யோகிகள் மகான்களாயிருந்தும், பொறாமை கொண்டெழுதினரென்பதற்கு பாஷ்யத்தில் எழுதிவைத்திருக்கும் அப்பிரமாணச்சொற்களே சான்றும்.

(இன்னும்) யோகிகளால், மறுக்கப் பட்ட சிவ சமவாதமென்னும், அகோர சிவாசாரிய பத்ததிப்படி ஆசிரியத்தன்மை வகித்தவர்களாகிய ஆதிசைவாசாரியர் களுக்கும், யோகிகளால் மறுக்கப்பட்ட தருமபுரமுதலாகிய மடாதிபதிக ளுக்கும், இவர் கொள்கைப்படி ஞானபாதவுண ர்ச்சி யில்லையென்று பெறப்படுவதால், ஆதிசை வர்களு மாசிரியராகார், மடாதிபதிகளு மாசிரி யராகார், யோகிகளது குருசந்தானத்தில் வந்த வர்களும் நைட்டிக விரதானுட்டானமில்லாதவர்க ளென்பதுஉலகப்பிரசித்தியாகையால், அவர்களும் ஆசிரியராகார். ஆகவே, யோகிகள் கூறும் வசன ங்களால், ஆசிரியத்தன்மை ஒருவருக்குமே யில்லை யென்று பெறப்படுகின்றது. ஐயோ பரிதாபம். !!

(இனி) கிருகஸ்தாசாரியர் ஆகமங்களில் கூறியவாறு பாம்பரையாக அனுஷ்டித்து வரு வதுலகு ஒப்பும்படி இருக்க, நைட்டிகாசாரியர் களாயுள்ள மடாதிபதிகள், ஆதிகுருசந்தான பாம்பரைக்கு விரோதமாக, கூடீ ூத் பாதையின் பொருட்டு, நடுவில் தாமே காஷாயமுதலியவை தரித்துக்கொண்டதற்குக் காரணம் ஆதீனத்தின் தொன்மையை விசாரிக்கின் இனிது விளங்கும்.

## யோகிகள் கொள்கையுடையார் அறியவேண்டிய விஷயங்கள்

யோகிகள், அகோரசிவாசாரியர் கொள்கை சிவசமவாத மென்றும், அவர் பத்ததி பிழைப் பத்ததியென்று பிரலாபித்திருந்தும் இவர் வம்சத்தில், இவர்காலத்துக்கு முன்னுள்ளவரும், இவர்காலத்திலுள்ளவரும், பின்னுள்ளவரும், ஷைபத்ததியின்படி ஒழுகிய கிருகஸ்தாசாரியரிடத்தில், கிரியை முதலியவை செய்து வருவதாலும், இவர் காலத்தில் இவர் ஆதீனத்தைச்சேர்ந்த ஆலயங்களிலாவது. வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் பழமொழிப்படி ஷையோகிகள் ஷைபத்ததிப்படி பூசை, உற்சவம், கும்பாபிஷேக முதலிய கிரியைகளைச் செய்யக் கூடாதென்று, நிலைநாட்டா தொழிந்தமையாலும் அவர்கொள்கைத்தோல்வித்தான மென்பதுணர்க இனி இக்காலத்திலுள்ள அக்கொள்கையுடையார், படிப்பது இராமாயணம் இடிப்பதுபெருமாள்கோவில் என்று வழங்கும் சொல்லைப்போல் பேசுங்கொள்கையெல்லாம், யோகிகள் கொள்கையாய்ச் செய்யும் கிரியையெல்லாம், அகோரசிவாசாரியபத்ததியின்படி செய்துவருவதால் அக்கொள்கைப் போலியென்பதை யுணர்க.

(இன்னும்) இக்காலத்தில் ஆதீனத்தில் ஞானதீக்ஷை பெற்றுக்கொண்ட சிதம்பரததைச்

சேர்ந்த உடையூர் முத்துக்குமாரப்பிள்ளை அவர்களுக்கும், ஆதீன வித்துவானும், சிஷ்யரும் யோகிகளது கொள்கையை யனுசரித்தவருமாகிய சபாபதிநாவலரவர்கள், திருவாவடுதுறை ஆதினத்துச் சிதம்பரம் கட்டளைமடத்துபங்களாவில் இறக்க இருபதுநாளைக்குமுன் சீக்காயிருக்கும்போது சிதம்பரம் கிருகஸ்தாசாரியர் உலகமூர்த்திதேசிகர் மடத்தாரை வரவழைத்து, தனக்கு நெறியான காலமென்று எண்ணுகிறேன். தவறிவிட்டால் எனக்குச்செய்யவேண்டிய கிரியைகளைத்தாங்கள் செய்துவைக்க வேண்டுமென்று, கேட்டுக்கொண்டதும் ஆதீனப் பொருளைக்கொண்டு அவ்வாறு நடந்ததும், யோகிகள் கொள்கையுடையாருக்குத் தெரிந்திருந்தும், ஷைகொள்கையுடையார்கள் சாஸ்திர சம்பிரதாய அனுட்டான முதலியவை தெரிந்தவர்களாயிருந்தும், மாறுபாடாகக் கொள்ளுதல் யுக தர்மமென்றறிக.

சாத்திரத்தோடும் சம்பிரதாயத்தோடும் அனுட்டித்து வருபவர்களை, அவ்வாறு அனுட்டிப்பது சாத்திரவிரோத மென்று கூறும், சாத்திரமும் நன்கறியாத சிலர் சாத்திரப்படி ஒழுகாது சம்பிரதாயத்தையுமனுசரித்து ஒழுகுதல் அவேத மென்றறிக.

இனியாவது யோகிகள் கொள்கையை அனுசரித்து இவர்களுக்குச் சம்பந்தப்பட்ட ஆலயங்களிலும் தங்கள் ஆசிரியரிடத்திலும் சொல்லி ஷைபத்ததிப்படி செய்வதை விலக்கி யோகிகளது கொள்கைப் பத்ததிப்படி செய்வதே உத்தமமாணுக்கர் கடமையாம்.

சைவபரிபாலனம் துந்துபிஷு தைமீ 2உ பத்திரிகையில் கூறியிருக்கும் யோகிகளது கொள்கை யுடையார், சொல்லுதல் யார்க்கும் எளிய என்றபடி, எளிதாய்ச்சொல்லி, சொல்லிய வண்ணஞ்செய்யாதுவிடுதலே அதுபோலியாதற்குப் போதுமான சாக்ஷியாகும் என்னும் வாக்கியம் எழுதியிருப்பதால் யோகிகளது கொள்கை யுடையாரையே மேலே சொல்லப்பட்ட நியாயத்தால் வலியுறுத்தி நிற்கின்ற தென்றறிக.

(இனி) இதற்குமறுப்பெழுதும் சிவஞான யோகிகளது கொள்கையுடையார்ஷையோகிகளுக்குப் பிந்திய ஆசிரியராக வுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் ஷைவருணத்து கிருகஸ்தருக்குக் குருத்துவ முண்டென்று கூறுமுறையாற்கூறித் தாபிக்கு முறையாற் ரூபித்து சைவசமயநெறி முதலிய நூல்களில் எழுதியிருப்பதை நன்குணர்க.

இல்லைவை திகநெறி யில்லை நல்லற
மில்லைநால் வருணமாச் சிரம மில்லையா
லில்லைமா ணாக்கர்க ளில்லை யாரிய
ரில்லைநல் லொழுக்கமுங் கலியினென்பவே.

என்னும் யோகிகள் அருளிச்செய்த காஞ்சி புராணச் செய்யுளா லறிக.

சைவபரிபாலன பத்திராதிபரும், ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனதம்பிரான் குழாத்து ளொருவராகிய ஸ்ரீ கந்தசாமித் தம்பிரானவர்க ளால் துந்துபிஸூ கார்த்திகைமீ 30உ வெளி வந்த பத்திரிகையில், யோகிகள் பாஷ்யத்தில் விலக்கப்பட்ட கிருகஸ்தாசிரியருடைய சிறப்பும் பாஷ்யத்தில் கூறப்பட்ட நைட்டிகாசிரியருடைய தாழ்வும்ஷை யோகிகளது ஆதீனத்து ஷை சுவாமி களால் எழுதியிருப்பதை நன்கறிக.

(இன்னும்) திருவாவடுதுறை ஆதீனவித் துவானும், சிஷ்யருமாகிய கோப்பாய்ச்சபாபதிப் பிள்ளையின் பேரில் அகோர சிவாசாரிய பத்ததி தூஷண கண்டனம் என்னும், மாவிட்டபுரக் கந்தசுவாமிகோவில்கா. சபாபதிக்குருக்கள்என்று கையெழுத்து வைத்து, வெகுதானிய ஸூ ஐப்பசிமீ 18உ அச்சிட்டிருக்கும் நோட்டீசைப் பார்த்து அடங்குவாராக. (ஷை நோட்டீஸ் இதில் 15-பக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது.)

(இனி) வேதாகமமுதலிய அனேக மூல கிரந்தங்களும், யோகிகளால் அருளிச்செய்யப் பட்ட அனேக நூல்களும் பாஷியத்தில் சிலபாகமும் நெடுநாளைக்குமுன் அச்சுக்கு வந்தி ருந்தும், இப்போது வந்திருக்கும் திருட்டுப் பாஷ்யம் இதுவரையில் அச்சுக்கு வாராத தற்குக்

காரணம் இன்னதென்பதூஉம், திருட்டுப்பாஷ்யத்தை அச்சிட்டவர்மரபும், தன்மையும், இன்னதென்பதூஉம்ஷெிபாஷ்யத்தை அச்சிடக்கூடாதென்று ஆதீனத்துத் தம்பிரான்களும், சில வித்துவான்களும், தடுத்ததற்குக்காரணம் இன்னதென்பதூஉம், குருபரம்பரை சிஷ்யபரம்பரை இன்னதென்பதூஉம், பாஷ்யவிஷயத்தைப் பேசக்கூடிய தகுதியுடையார்கள் இன்னாரென்பதூஉம், பின்னெழுதுவாம்.

இதிற்கண்ட குருத்துவ விஷயத்திற்கு யோகிகள்கொள்கைப்படிபாஷ்யத்தில்பிரமாணமும்அனுட்டிப்புமில்லாததால் ஒழித்துஇதில் கூறப்பட்ட பிரமாணத்தாலும் அனுட்டிப்பாலும் குருத்துவமுண்டென்று நிர்ணயிக்கப் பெற்றது.

ஸ்ரீமெய்கண்டதேவன் திருவடிவாழ்க.

---

குறிப்பு:—இந்நூலின்கட்கண்ட விஷயங்கட்கு விடையளிப்பவர்கள், ஈண்டெடுத்துக்கொண்ட விஷயத்திற்கு சுருதி, யுக்தி, அனுபவங்களுக்கு மாறின்றிக் கிரமமாகவிடையளித்தலேயன்றி வீணே, இலக்கணக்குற்றம்அது, இலக்கியகுற்றம் இது என்று ஏமாற்றுவது தோல்வித்தானத்திற்கு அடையாளம்.

துந்துபிஸூ மாசிமீ 13உ

கடவுள் துணை.

# அகோரசிவாசாரியபத்ததி தூஷண கண்டனம்.

---

கோப்பாய்ச் சபாபதிப் பிள்ளையே.

நீர் இந்த மீ ௬ ௨ திங்கட்கிழமை இராத்திரி, இம்மாவிட்டபுரத்துக் கந்தசுவாமி கோயிலிலே செய்த பிரசங்கத்திலே சமவாத சைவர்கள் எல்லாருமரகத்துக்குப்போவார்கள் என்றீர். முன் "சூருவளி" என்ற ஒரு பத்திரிகையிலே சமவாதசைவர்களைப் பிசாசுகள என்றீர். அகோரசிவாசாரிய ப த் த தி பிழைப்பத்ததி அதைக் கைக்கொள்ளுகிறவர்கள் சமவாத சைவர்கள் என்று தூஷித்துக்கொண்டு திரிகிறீர்.

பூமியிலுள்ள சிவாலய விக்கினேசுராலய சுப்பிரமணியாலயங்களிலே பூசை திருவிழாச் சம்புரோட்சண முதலிய கிரியைகள் செய்கிற ஆதிசைவர்களெல்லாரும் அகோர சிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள். மகாசைவர்கள் எல்லாரும் அகோர சிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள். சைவ வேளாண் குருமார்கள் எல்லாரும் அகோரசிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள், திருவண்ணமலை யாதீனத்தார் சிதம்பர வாதீனத்தார் காஞ்சீபுர வாதீனத்தார் திருவக்கரை யாதீனத்தார்கள் எல்

லாரும் அகோர சிவாசாரிய பத்ததியைக் கைக்கொள்ளுகிறவர்கள். தருமபுர வாதீனத்தாரும் சொக்கபுர வாதீனத்தாரும், அகோர சிவாசாரிய பத்ததிப்படி மொழிபெயர்க்கப்பட்ட நித்திய கன்மக்குறளைக் கைக்கொள்ளுகிறவர்கள். தொண்டைமண்டல வேளாளர்கள், கார்காத்த வேளாளர்கள், சோழிய வேளாளர்கள். வேளாண்செட்டிகள் முதலிய சைவர்களுள்ளே, சில சொழிய மற்றவர்கள் எல்லாரும், மேலே சொல்லப்பட்ட ஆதிசைவர் முதலானவர்களுக்குச் சீஷர்கள். இப்படியாகவே, இவர்களெல்லாரையும் நீர் பிசாசுகளென்று சொல்லிவிட்டீர். இனி நீர் யாவர்? சற்றே சொல்லும்.

உமக்குச் சமயதீக்ஷைசெய்தவர், விசேஷதீக்ஷை செய்தவர், கலியாண ஓமஞ்செய்தவர் வேதாரணியத்துச் சைவவேளாண் குருமார்களன்றோ! அவர்கள் கைக்கொள்வது அகோரசிவாசாரிய பத்ததியன்றோ! அவர்கள் உமக்கு அந்தக் கிரியைகள் செய்தது அகோர சிவாசாரிய பத்ததிப்படியன்றோ! இப்படியாகவே, நீரும் பிசாசுதானே. நீரும் நரகத்திற்குப் போவீர் தானே. ஓகோ! நீர் தப்ப வழி யெங்கே!

"நான் முன்பு பிசாசு தான், பின்பு சித்தாந்த சைவராகிய திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டார சந்நிதியையடைந்து தீக்ஷை பெற்றுச் சிவபூசை எழுந்தருளப்பண்ணிக்கொண்டேன். இப்பொழுது நான் பிசாசல்லேன். மோக்ஷஞ்சேர்வேன்" என்பீராயின், உம்மைத் திருவாவடுதுறைப் பிரசாதத்துக்கு அனுப்பி

விட்டது அகோர சிவாசாரிய பத்ததியன்றோ? "நன்றி மறப்பது நன்றன்று," உம்முடைய மனைவி முதலானவர்களையும் திருவாவடுதுறைப் பண்டார சந்நிதியிடத்தே தீக்ஷை பெறுவித்தீரா? இல்லையே. இல்லையாகவே பிசாசுகள் சமைத்தது புசிக்கிற நீர் பிசாசுதானே இன்னும். உம்முடைய பிதா மாதாக்கள் இறந்தால், நீர் அவர்களுக்கு எந்தக்குருவைக்கொண்டு எந்தப் பத்ததிப்படி அந்தியேட்டி செய்விப்பீர்? வேறு பத்ததியும் அப்பத்ததியைச் கொள்ளுங் குருவும் இங்கில்லையே, பின்பு நீர் பிசாசு குருவைக்கொண்டு பிசாசு பத்ததிப்படிதான் அந்தியேட்டி செய்விப்பீர். பின் நீர் எப்படித் தப்புவீர்? அது நிற்க; இனிச்சற்றே மேலேபோவோம்.

திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டாரசந்நிதிகள் நீர் பிசாசுகளென்கிற ஆதிசைவர்களாலே பூசிக்கப்படுகிற மூர்த்திகளை நமஸ்கரிப்பதும், அந்த ஆதிசைவர்களைக் கும்பிடுவதும், அவர்கள் கையினாலே விபூதி வாங்கித் தரிப்பதும், அவர்கள் தொட்டு நிவேதித்த அன்ன முதலியவற்றைப் புசிப்பதும், நீர் காணவில்லையா? திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டார சந்நிதிகள் நீர் பிசாசுகளென்கிற சைவ வேளாளர்களை வேளாள செட்டிகளைத் தீண்டியணைத்து விபூதி தரித்துவிடுவதும், அவர்களை எதிரிருத்திப்புசிப்பதும், அவர்கள் வீட்டிலே புசிப்பதும் நீர் காணவில்லையா? திருவாவடுதுறை யாதீனத்துத் தம்பிரான்கள். நீர் பிசாசுகளென்கிற அந்நியாதீனத்துப் பண்டார சந்நிதிகளையும். தம்பிரான்களையும் நமஸ்கரிப்பதும், சிற்சில பொழுது தங்கள் ஆன்மார்த்த பூசையை அந்தத் தம்பிரான் மார்களைக்கொண்டு செய்விப்பதும்; நீர்

கிரண்வில்லையா? இவையெல்லாங் கண்ட உமக்குத்
திருவாவடுதுறை யாதீனத்தார்கள் எப்படித் தோன்று
கிறார்கள்! சற்றேவாய்திறவும், உமக்கு அன்னமிட்டுக்
கல்வி கற்பித்து உம்மை "வித்துவான்" ஆக்கிவிட்ட
ஆதீனத்தார்களைப் பிசாசுகளென்று பேசாது பேசித்
திரிவது, பிள்ளாய்! உமக்கு அடாது.

மகா வித்துவானாகிய மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை
திருவாவடுதுறை யாதீனத்திலே நிருவாண தீக்ஷை
பெற்று உடையவர் பூசை எழுந்தருளப்பண்ணிக்கொ
ண்டவரேயாகவும், திருவாவடுதுறையிற்றானே மடத்
துக்கெதிரே இறந்துவிட, அவ்வாதீனத்துப் பண்டார
சந்நிதிகள், நீர் பிசாசுகளென்கிற சைவவேளாண் குரு
மாருளொருவரை அங்கே வருவித்து, அவரைக்
கொண்டு அகோரசிவாசாரிய பத்ததிப்படி தமது ஆதீ
னத்துப் பொருள்கொண்டே அப்பிள்ளைக்கு அந்தி
யேட்டி செய்வித்தது நீர் அறியீரா? இஃதறிந்தும்,
என் நீர் துள்ளுகிறீர்! உமக்குக் கதி யாது! நாளை நீர்
இறந்தால், உமக்கும் இப்படி ஒரு பிசாசுதானே வந்து
அந்தியேட்டி செய்துவிடும்.

உமது பிரசங்கத்துக்கு இம் மாவிட்டபுரக் கந்
தசுவாமிகோயிலிலே இடந்தந்த குருக்கள் எந்தப் பத்ததி
கைக்கொள்ளுகிறவர்? அவரையும் பிசாசு என்று சொ
ல்லிவிட்டீர். உம்மாலே பிசாசு எனப்படாதவர் யாவர்?

அகோர சிவாசாரியர் பிசாசு என்ற நீர் அவர்
பத்ததிப்படியே சௌசவகவல் அநுட்டானவகவல்
சூரியபூசையகவல் சிவபூசையகவல் போசனவகவல்கள்
செய்த திருவாரூர் ஞானப்பிரகாசதேசிகரும் பிசாசு,

அவரிடத்தே ஞானோபதேசம் பெற்றுச் சிவபோச்சாரஞ் செய்த தருமபுரவாதீனத்து ஆதிகுருவாகிய ஞானசம்பந்ததேசிகரும் பிசாசு; அவர்மரபில் வந்த மாசிலாமணிதேசிகரும் பிசாசு, அவர் சீஷராய் அவரைப் பண்டார மும்மணிக்கோவையினாலே துதித்த குமரகுருயரசுவாமிகளும் பிசாசு, அவர் பாடிய முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழை நித்தமும் பாராயணஞ் செய்த திருவாவடுதுறைச் சுப்பிரமணியதேசிகரும் பிசாசு, அவர் சீஷராகிய அம்பலவாணதேசிகரும் பிசாசு, அவர் சீஷராகிய இப்பொழுதைச் சுப்பிரமணியதேசிகரும் பிசாசு, என்றுவிட்டீரே. எனவே, இந்தச் சுப்பிரமணிய தேசிகரிடத்தே தீக்ஷைபெற்ற நீரும் பிசாசு, என்றுவிட்டீரே. ஒகோ! எந்தவகையாலும் நீர் தப்ப வழியில்லையே! பேச அறியாது பேசி அகப்பட்டுக்கொண்ட உம்மைப்போலவிவேகி யாவர்!

இனி முன் போலப் பதர்வார்த்தைகள் பேசித் திரியாது அடங்கி ஒழுகக்கடவீர்.

இங்ஙனம், மாவிட்டபுரக் கந்தசுவாமிகோயிலில் அருச்சகருள் ஒருவராகிய.

கா. சபாபதிக்குருக்கள்.

வெகுதானிய ௵<br>ஐப்பசி ௴ 13 ௳